மாமல்லபுரம் வெண்ணெய் உருண்டை பாறை சரிவான குன்றின் மீது எந்த ஆதரவுமில்லாமல் இயற்கையாக நிலைத்து நிற்கும் 250 டன் எடையுள்ள ஒரு பிரம்மாண்டமான பாறை. 1,200 ஆண்டுகளுக்கு மேலாக விழாமல் சுற்றுலாப் பயணிகளை வியப்பில் ஆழ்த்தும் பாறையாக இது உள்ளது.

திருக்கழுகுன்றம் நகரின் மையப் பகுதியில் பக்தவச்சலேஸ்வரர் கோயில் 4 ராஜ கோபுரங்களுடன் மிக பிரம்மாண்டமாக அமைந்துள்ளது. தேவார பாடல் பெற்ற தலமாக விளங்கும் இக்கோயிலில் திரிபுரசுந்தரி அம்பாள் தனி சந்நிதியில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

சென்னை சுற்றுவட்ட சாலை அமைப்பதால்

சேதமடைந்த 9 ஏரிகளில் சீரமைப்பு பணி

அமைச்சர் நாசர் தொடங்கி வைத்தார்

■ பொன்னேரி

சென்னை சுற்றுவட்ட சாலை அமைப்பதால் மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் சேதமடைந்த வன்னிப்பாக்கம் பெரிய ஏரி உட்பட 9 ஏரிகளை மறுசீரமைத்தல் மற்றும் புனரமைக்கும் பணிகளை நேற்று நாலூர் பெரிய ஏரியில் அமைச்சர் சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்.

தமிழக நெடுஞ்சாலைத் துறை சார்பில், எண்ணூர் முதல் மாமல்லபுரம் வரை 120 கிமீ நீளத்துக்கு சென்னை சுற்றுவட்ட சாலை அமைக்கப்பட்டு வருகிறது. ஆறு வழிச் சாலையான இச்சாலை திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 3 மாவட்டங்கள் வழியாக செல்கிறது.

5 பிரிவுகளாக நடந்து வரும் சென்னை சுற்றுவட்ட சாலையில், பிரிவு 1 சாலை, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் உள்ள வாயலூர் மாமணிக் கால் ஏரி, நெய்தவாயல் பெரிய ஏரி, நெய்தவாயல் சிறிய ஏரி, கல்பாக்கம் பெரிய ஏரி, நாலூர் பெரிய ஏரி, நாலூர் சிறிய ஏரி, வன்னிப்பாக்கம் பெரிய ஏரி, வன்னிப்பாக்கம் சிறிய ஏரி, ஆமூர் ஏரி ஆகிய 9 ஏரிகள் வழியாக அமைக்கப்பட்டு வருகிறது.

சென்னை சுற்றுவட்ட சாலை அமைப்பதால், நெய்தவாயல் மற்றும் நாலூர் ஏரிகள் உள்ளிட்ட 9 ஏரிகளின் கரைகள், மதகுகள் மற்றும் கலங்கல்கள் சேதமடைந்துள்ளன. சேதமடைந்துள்ள ஏரிகளை மீட்டுருவாக்கம் செய்ய நெடுஞ்சாலைத் துறை ரூ.37 கோடியை நீர்வளத் துறைக்கு செலுத்தியுள்ளது.

ஆகவே, சென்னை சுற்றுவட்ட சாலை அமைப்பதால் சேதமடைந்துள்ள 9 ஏரிகளை மறுசீரமைத்தல் மற்றும் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கான பூமி பூஜை நேற்று காலை நாலூர் பெரிய ஏரியில் நடைபெற்றது. இதில், அமைச்சர் சா.மு. நாசர் பங்கேற்று, நாலூர் பெரிய ஏரி உட்பட 9 ஏரிகளை மறுசீரமைத்தல் மற்றும் புனரமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

அப்போது, செய்தியாளர்களிடம் அமைச்சர் சா.மு.நாசர் பேசும்போது, "9 ஏரிகளை மறுசீரமைத்தல் மற்றும் புனரமைக்கும் பணிகளால், 1,990 ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவது உறுதி செய்யப்படுவதுடன், 3,721 விவசாயிகள் பயன் பெறுவர்" என்றார்.

இந்நிகழ்வில், ஆட்சியர் பிரதாப், பொன்னேரி கோட்டாட்சியர் ரவிச்சந்திரன், பொன்னேரி எம்எல்ஏ துரை. சந்திரசேகர், நீர்வளத் துறையின் ஆரணியாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் கார்த்திகேயன், உதவி செயற்பொறியாளர் விஜய்ராகவன், உதவி பொறியாளர்கள் நந்தகுமார், ஸ்ரீனிவாச பிரகாஷ், கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பெண்களுக்கான பிரீமியம் சேமிப்புக் கணக்கு

'பாப் விமென் ச:ைபர்'

பாங்க் ஆஃப் பரோடா அறிமுகம்

■ சென்னை

'பாப் விமென் ச:ைபர் சேமிப்புக் கணக்கு' என்ற பெயரில் பெண்களுக்கான பிரத்யேக பிரீமியம் சேமிப்புக் கணக்கை பாங்க் ஆஃப் பரோடா அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த கணக்கில் ரூ.10 லட்சம் வரையிலான புற்று நோய் பராமரிப்பு காப்புத் திட்டம், கூடுதலாக 6 பேர் வரையிலான குடும்ப உறுப்பினர்களுக்கு இலவச ஆன்லைன் மருத்துவ ஆலோசனைகள் மருந்துகள் நோயியல் பரிசோதனைகளில் சலுகைகள் உள்ளிட்ட பல்வேறு சுகாதாரம், உடல்நலன் சார்ந்த நன்மைகள் வழங்கப்படுகின்றன.

மேலும் 'பாப் பூமி ரூபே செலக்ட்' டெபிட் கார்டும் வழங்கப்படுகிறது. இது உள்நாட்டு விமான நிலைய ஓய்வறைகளுக்கான அணுகல், இலவச உடற்பயிற்சிக் கூட உறுப்பினர் உரிமை, ஓடிடி சந்தா உள்ளிட்ட சலுகைகளை வழங்குகிறது. மேலும் 'பாப்கார்ட் டியாரா' கிரெடிட் கார்டின் முதலாண்டு கட்டணத்தில் ரிவார்டு புள்ளிகளாக 50% தள்ளுபடி பெறுவர்.

இந்த வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் பாதுகாப்புப் பெட்டக கட்டணங்களில் தள்ளுபடி, வீட்டுக் கடன் செயலாக்கக் கட்டணத்தில் 50% தள்ளுபடி போன்ற சலுகைகளையும் பெறலாம்.

அறிமுக நிகழ்வில் பரோடா வங்கியின் நிர்வாக இயக்குநர், தலைமை செயல் அதிகாரி தேபத்த சந்த கூறும்போது, "இந்த சேமிப்புக் கணக்கு, பெண்களை மையமாக கொண்ட அர்த்தமுள்ள நிதி தீர்வுகளை உருவாக்குவதற்கான பாங்க் ஆஃப் பரோடாவின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது" என்றார்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

6 லட்சத்தை தாண்டிய

ராயல் என்:பீல்டு மீட்டியோர் 350 விற்பனை

■ சென்னை

இந்தியாவில் அதிகம் விரும்பப்படும் க்ரூஸர் பைக்கான ராயல் என்:பீல்டு மீட்டியோர் 350 (Meteor 350), நவ.2020-ல் அறிமுகப்படுத்தப்பட்ட திலிருந்து உலகெங்கிலும் உள்ள பயணிகளின் நம்பிக்கையைப் பெற்று, தற்போது விற்பனை எண்ணிக்கையில்6லட்சம்என்றமைல் கல்லைக் கடந்துள்ளது.

சவுகரியமான க்ரூஸிங் வசதி, மேம்படுத்தப்பட்ட புதிய இன்ஜின் மற்றும் சிரமமில்லா பயணத்தை வழங்குவதால், அனுபவம் வாய்ந்த மோட்டார் பைக் ஓட்டுநர்கள் மற்றும் புதிய ரைடர்கள் மத்தியில் விருப்பமான க்ரூஸர் பைக்காக மீட்டியோர் 350 குறுகிய காலத்தில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளது. பைக் துறையின் மதிப்பு மிக்க விருதான 'இந்தியன் மோட்டார் பைக் ஆ:ப் தி இயர் 2021' விருது உட்பட பல உலகளாவிய பாராட்டுகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

நகரப் போக்குவரத்தோ திறந்த நெடுஞ்சாலை பயணமோ, எதுவாக இருந்தாலும், ஒரு சமநிலையுடன் கூடிய வசதியான பயண அனுபவத்தை வழங்குவதன் மூலம், மீட்டியோர் 350 புதிய பயணிகளை தன் வசம் ஈர்த்தது. இந்த மோட்டார் பைக் இந்தியா மற்றும் சர்வதேச சந்தைகளில், குறிப்பாக லத்தீன் அமெரிக்கா, சார்க் நாடுகள், ஐரோப்பிய சந்தைகளில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்த பைக் 349சிசி ஏர்-ஆயில்-கூல்டு, சிங்கிள்-சிலிண்டர் இன்ஜின் மூலம் இயக்கப்படுகிறது. டிஜி-அனலாக் இன்ஸ்ட்ரூமென்ட் கிளஸ்டர், டிரிப்பர் நேவிகேஷன் பாட், எல்இடி லைட்டிங் எலமென்ட்ஸ், பிரீமியம் ஸ்விட்ச்கியர், யுஎஸ்பி டைப்-சி ஃபாஸ்ட் சார்ஜிங் போர்ட், அசிஸ்ட்-அண்ட்-ஸ்லிப் கிளட்ச், அட்ஜஸ்டபிள் லீவர்ஸ் போன்ற அம்சங்கள் உள்ளன.

மீட்டியோர் 350 பைக் கானது:ஃபயர்பால், ஸ்டெல்லார், அரோரா மற்றும் சூப்பர் நோவா என்கிற 4 தனித்துவமான ரகங்களில் வருகிறது. இந்தியாவில் இவற்றின் பிரத்யேக ஷோரூம் விலை ரூ.1,95,546 முதல் ரூ.2,15,770 வரை உள்ளது. வலுவான டீலர் நெட்வொர்க்கின் ஆதரவுடன் இந்தியாவில் 2,000-க்கும் மேற்பட்ட விற்பனைமையங்கள் மற்றும் சர்வதேசச் சந்தைகளில் 1,000-க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களுடன் ராயல் என்:பீல்டு இயங்கி வருகிறது.

பைக் மோதிய விபத்தில் தலைமை காவலர் மரணம்

■ காஞ்சிபுரம்

திருவண்ணாமலை மாவட்டம் அப்துல்லாபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் குமரேசன் (39). இவர் காஞ்சி தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வந்தார். நேற்று முன்தினம் இரவு குமரேசன் தனது பைக்கில் அரக்கோணம்-காஞ்சி சாலையில் காஞ்சிபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார். பெரியகரும்பூர் சந்திப்பு அருகேநின்றிருந்தபேருந்தை அவர் முந்திச் செல்ல முயன்றபோது, எதிரே வந்த மற்றொரு பைக் குமரேசன் மீது மோதியதில் தலை, உடலில் பலத்த காயம் ஏற்பட்டது. காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் அவர் உயிரிழந்தார். குமரேசனுக்கு சுமதி என்ற மனைவியும், ஜெயமுருகன் (15), மோகனவேல் (13) என இரு மகன்களும் உள்ளனர்.

மற்றொரு பைக்கை ஓட்டி வந்த தமிழ்ச்செல்வன் (29) காஞ்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். பொன்னேரிக்கரை போலீஸார் விசாரிக்கின்றனர்.

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
காகிதபுரம் – 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு.

TNPL அலகு-I பின்வரும் பொருட்களை ஒரு முறை விற்பனை அடிப்படையில் விற்பனை செய்வதற்கான டெண்டரை அழைக்கிறது.

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
2025065	Sale of used 110 KV Transformers, Booster, NGR, Insulators, Isolators and Aluminium Cable from TNPL Unit - I	19.03.2026

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை TNPL மற்றும் NIC இணையதளங்களில் மட்டும் வெளியிடப்படும். மேலும் விபரங்களுக்கு www.tnpl.com / https://tntenders.gov.in/nicgep/app இணையதளங்களை பார்வையிடவும்.

செ.ம.தொ.இ/1754/ஒப்பந்தப்புள்ளி/2026 நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

Central Bank of India சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
1911 से आपके लिए सेंट्रल 'CENTRAL' TO YOU SINCE 1911

செம்பியம் கிளை
ஹூசூர் கார்டன், செம்பியம், சென்னை-600 011 Ph: 044 - 2346 4336

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான கவாதீனத்தில் (Physical Possession)** எடுக்கப்பட்டு அந்த சொத்துக்கள் **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக **https://baanknet.com** என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ.எண்.1: கடன்தாரர் பெயர்: ரோஷன் கன்ட்ஸ்ரக்ஷன்ஸ், B-44/20, 70 அடி ரோடு, பெரியார் நகர், சென்னை-600 082 **Mr.V C ரோஷன்,** B-44/20, 70 அடி ரோடு, பெரியார் நகர், சென்னை-600 082 **Mr.J.ஜோயன்ஸ், ஜாமீன்தாரர்கள்: Mr.J.ஜாக்சன் ஏஞ்சலோ ஜெபராஜ், Mr.G.ஜான், Mr.J.ஜோசுவா லிவிங்ஸ்டன் இன்பராஜ், Mrs.D.அனித் தேவ கிருபை (Anitte Deva Kirubai) அனைவரது முகவரி:** பழைய எண்.3/93 A, புதிய எண்.4/141, காமராஜர் சாலை, மஞ்சம்பாக்கம் அஞ்சல், மாதவரம், சென்னை-600 060

கோரிக்கை அறிவிப்பு தேதி: 05.04.2021 / கடன் நிலுவைத்தொகை: 10.03.2026 அன்றுள்ளபடி ₹ 2,94,69,937/- மற்றும் வட்டி, கட்டணங்கள், **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 04.07.2022**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

வட சென்னை பதிவு மாவட்டம், திருவொற்றியூர் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, **கதவு எண்.4/141, காமராஜர் சாலை, அசிசி நகர், மஞ்சம்பாக்கம், மாதவரம், சென்னை-600060** என்னும் முகவரியில் **8288 சதுர அடி நிலம் அதில் 1740 சதுர அடி தரைத்தளம், 1740 சதுர அடி முதல் தளம் கொண்ட கட்டிடம்.** எல்லைகள்: வடக்கு: 23 அடி ரோடு, தெற்கு: மனை எண்.32, கிழக்கு: மனை எண்.20, மேற்கு: மனை எண்.22.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 5,91,00,000/- டீடவணித்தொகை ₹ 59,10,000/- ஏல உயர்வு தொகை ₹ 1,00,000/-

வ.எண்.2: கடன்தாரர் பெயர்: Mr.P.சிவராமகிருஷ்ணன், S/o.P.பார்த்திபன், **ஜாமீன்தாரர்: Mrs.P.சித்ரா,** W/o.Mr.P.பார்த்திபன், **Mr.P.பார்த்திபன் (காலமானவர்) (அவரது சார்பாக சட்டப்படியான வாரிசுதாரர்கள்) Mr.P.சிவராமகிருஷ்ணன்,** S/o.P.பார்த்திபன், **Mrs.P.சித்ரா,** W/o.Mr.P.பார்த்திபன், **அனைவரது முகவரி,** மனை எண்.8, பழைய கதவு எண்.9, புதிய கதவு எண்.49, எத்திராஜ் சுவாமி சாலை, எருக்கஞ்சேரி, சென்னை-600118

கோரிக்கை அறிவிப்பு தேதி: 06.11.2024 / கடன் நிலுவைத்தொகை: 10.03.2026 அன்றுள்ளபடி ₹ 3,09,23,449.15 மற்றும் வட்டி, கட்டணங்கள், **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 05.02.2025**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

வட சென்னை பதிவு மாவட்டம், திருவொற்றியூர் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.17/2B, புதிய சர்வே எண்.17/9, பட்டா எண்.1808, **மனை எண்.57, எண்.40, மாத்தூர் கிராமம், ஓலக்குளம் மாத்தூர் (அஞ்சல்), மாதவரம் தாலுகா, சென்னை-600068** என்னும் முகவரியில் **உள்ள சொத்து.** எல்லைகள்: வடக்கு: மனை எண்.58, தெற்கு: மனை எண்.56, கிழக்கு: 24 அடி ரோடு, மேற்கு: காலி நிலம்.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 78,50,000/- டீடவணித்தொகை ₹ 7,85,000/- ஏல உயர்வு தொகை ₹ 20,000/-

இ-ஏல தேதி மற்றும் நேரம்: 17.04.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 17.04.2026 மாலை **3.30** மணிக்குள்

அனைத்து சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 10.04.2026 காலை **10.00** மணி முதல் 4 மணி வரை

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: https://baanknet.com (**அல்லது**) வங்கியின் இணையதள முகவரி: https://www.centralbankofindia.co.in. சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, செம்பியம் சென்னை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளை தலைவர்,** Mobile No. 70456 45240 அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

SARFAESI சட்டம், 2002 விதி 8(6)-ன் கீழ் 30 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு
மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
தேதி: 11.03.2026 **சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா**

மறைமலை நகர் நகராட்சியில்

அம்மா உணவகத்தில் ரூ.88 லட்சம் முறைகேடு

நடவடிக்கை எடுக்க தணிக்கை துறை அறிவுறுத்தல்

■ மறைமலை நகர்

அதிமுக ஆட்சியில் குறைந்த விலையில், ஏழை-எளிய மக்களுக்கு தரமான உணவு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக அம்மா உணவகங்கள் உருவாக்கப்பட்டன.

செங்கை மாவட்டம், மறைமலைநகர் நகராட்சியில் தொழிற்சாலைகள் அதிகம் என்பதால் இரண்டு அம்மா உணவகங்கள் தொடங்கப்பட்டன. இந்நிலையில் அம்மா உணவகங்களுக்காக நடைபெற்ற கொள்முதல் நேர்மையாக நடக்கவில்லை. அது தொடர்பாக பல முறை கேடுகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

வெளி மார்க்கெட்டுகளில் இருந்து காய்கறிகள் உள்ளிட்ட பொருள்கள் வாங்கியதில், முறையான கணக்குகள் இல்லை. மொத்தத்தில், 2024-25 நிதியாண்டில், அம்மா உணவகத்துக்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூ.1,02,67,917. வருமானம் என்ற வகையில் அரசுக்கு திரும்பக் கிடைத்தது ரூ.14,06,145 மட்டும்தான்.

இதனால், நஷ்டம் ரூ.88,61,772 ஆகும். அம்மா உணவக நிர்வாகத்தில் விதிமுறைகளை சரிவர பின்பற்றாததால், நகராட்சிக்கு ரூ.88,61,772 இழப்பு ஏற்பட்டுள்ளதாக தணிக்கை அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

இது குறித்து அதிமுக நிர்வாகி கூறும்போது, "முறைகேடு குறித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும். தணிக்கை துறை குறிப்பிட்டது போல் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லை எனில் அதிமுக சார்பில் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுக்கிறோம்" என்றார்.

மார்ச் 18 முதல் 28 வரை வண்டலூர் பூங்காவில் 'சிங்கம் ச:ைபாரி' நிறுத்தம்

■ வண்டலூர்

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பார்வையாளர்களை குஷிப்படுத்தும் நோக்கில் 147 ஏக்கர் பரப்பளவில் அடர்ந்த காட்டுப் பகுதியில் சிங்கங்கள் அருகே சென்று கண்டு ரசிக்கும் 'லயன் ச:ைபாரி சேவை பயன்பாட்டில் உள்ளது.

திரும்பும் வழியில் மான் ச:ைபாரி சேவையும் உண்டு. இந்நிலையில் பழுது பார்த்தல், பராமரிப்பு பணிக்காக இந்த சேவைகள் மார்ச் 18 முதல் 28 வரை நிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

SBFC பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம் : யூனிட் எண்.103, முதல் தளம், C&B ஸ்கூயர், சங்கம் காம்ப்ளக்ஸ், சாகலா கிராமம், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059

கோரிக்கை அறிவிப்பு

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள் **SBFC பைனான்ஸ் லிமிடெட்** அவர்களிடமிருந்து நிதி உதவியைப் பெற்றுள்ளனர். நிதி உதவியைப் பெற்றிருந்தாலும், கடன்தாரர்கள்/அடமானதாரர்கள் நிலுவைத் தேதிகளின்படி வட்டி மற்றும் அசல் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் பல்வேறு தவறுகளைச் செய்துள்ளனர். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கணக்குகள் அந்தந்த தேதிகளில் செயல்படாத சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளது, SBFC பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி SBFC புத்தகங்களில் உள்ளபடி நிதிச் சொத்துக்களை பத்திரப்படுத்துதல் மற்றும் புனரமைத்தல் மற்றும் அடமான வட்டிச் சட்டம், 2002 ("SARFAESI சட்டம்") அமலாக்கம் மற்றும் பாதுகாப்பு நலன் (அமலாக்க விதிகள், 2002-ன் விதி 3 உடன் படிக்கப்பட்ட பிரிவு 13(12)-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்த தேதிகளின் கோரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டன, கடன்தாரர்கள்/அடமானதாரர்கள் அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை ஒப்பந்த விகிதத்தில் மேலும் வட்டி, தற்செயலான செலவுகள், கட்டணங்கள் போன்றவற்றை அறிவிப்புகள் பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் பணம் செலுத்தும் தேதி வரை திருப்பிச் செலுத்த வேண்டும். அவர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளில் அவர்களுக்கு வழங்கப்பட்ட அறிப்புகள் வழங்கப்படாமல் திரும்பிவிட்டதால், அதைப்பற்றி பொது அறிவிப்பு மூலம் தெரியப்படுத்த பொது அறிவிப்பு அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர் பெயர்/ முகவரி பெயர் & ட்ரஸ்ட் பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள் & NPA	கடன் மற்றும் நிலுவை தொகை	பாதுகாப்பு சொத்துகள் முகவரி
1	**1. திரு. G ராஜேஷ், 2. திரு. தியாகராஜன், 3 திரு. சீனிவாசன், 4. திரு. பிரபாகரன், 5 திருமதி. கலைவாணி, 6. திருமதி. கல்பனா,** ஆகியோரின் முகவரி மனை எண்.6, திருவள்ளுவர் தெரு, லேக் வியூ கார்டன், கொரட்டூர், சென்னை-600076.	**கோரிக்கை அறிவிப்பு நாள்: 26.02.2026** **NPA நாள்: (NPA) 05.06.2023**	**கடன் கணக்கு எண். ME0541001 (PR00446456)** **கடன் தொகை ரூ.3357000/- (ரூபாய் மூப்பத்தி மூன்று இலட்சத்து ஐம்பத்தி ஏழாயிரம் மட்டும்) வசதி ஒப்பந்தம் எண். ME0541001 (PR00446456)** **மொத்த நிலுவைத் தொகை : ரூ.3091486/-** (ரூபாய் முப்பது இலட்சத்து தொண்ணூற்றி ஒராயிரத்து நாலூற்றி எண்பத்தி ஆறு மட்டும்) 26.02.2026 அன்று, மற்றும் 27.02.2026 அன்று முதல் வசூலிக்கப்படாத வட்டி உட்பட.	சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், நிலம் அளவுகள் 1027 சதுர அடி மற்றும் கட்டிடம், மனை எண்.ஏ, லேக் வியூ கார்டன், கொரட்டூர் கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட சர்வே எண்கள்.401, 402/1 மற்றும் 402/2 மற்றும் எல்லைகள், **எல்லைகள்: கிழக்கு:** 20 அடி சாலை மற்றும் **மேற்கு:** மனை எண்.10, **வடக்கு:** மனை எண்.பி, **தெற்கு:** காலி நிலங்கள்.

மேற்கூறிய குழ்நிலையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மேலே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகைகளை எதிர்கால வட்டி மற்றும் பொருந்தக்கூடிய கட்டணங்களுடன் செலுத்துமாறு மேற்கண்ட கடன்தாரர்கள், இணை-கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது, தவறினால், இந்த அறிவிப்பின் தேதியின் 60 நாட்கள் காலாவதியான பிறகு SARFAESI சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதன்கீழ் பொருந்தக்கூடிய விதிகளின்கீழ் கடன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களின் அடமான சொத்துக்களை கையகப்படுத்துவது உட்பட, அடமானம் வைக்கப்பட்ட சொத்துகளுக்கு எதிராக மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
SARFAESI சட்டத்தின் பிரிவு 13(13)-ன்கீழ், கடன்தாரர் கடன் அளித்தவரின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி, அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை விற்பனை, குத்தகை அல்லது வேறுவிதமாக மாற்றக்கூடாது என்பதை நினைவில் கொள்ளவும்.

நாள் : 13.03.2026, இடம் : தமிழ்நாடு **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, SBFC பைனான்ஸ் லிமிடெட்**

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், தயவுற்று உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் தேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வருந்துகிறோம்!

இரங்கல்

ஆண்டு நினைவு நாள்

12-ம் ஆண்டு நினைவு தினம்

Dr.K.சூர்யா MBBS

ஆண்டுகள் பல கடந்தாலும்
உன்னை நினைக்காத நாளில்லை..

உன்னை பெற்று
நாங்கள் செய்த பேரதிர்ஷ்டம்
வந்த பயணத்தை நீ பாதியிலேயே
முடித்தது எங்கள் துரதிர்ஷ்டம்

மக்கள் மருத்துவராய் சேவையாற்ற
சிறப்பாக படித்தாய்-
அந்த பெருமை நிலைக்கும் முன்னே
பொறுமையின்றி போனாயே..

உன்னை இழந்ததால் ஏற்பட்ட
மனக்காயத்துக்கு உன் நினைவுதான்
எங்களுக்கு மருந்து

உன்னை உயர்வாய் வைத்து உயிராய்
நினைத்து வாழ்வை நகர்த்துகிறோம்
ஒவ்வொரு நாளும்..

நீங்கா நினைவுகளுடன்...
தந்தை, சகோதரிகள், பாட்டி

Dr.K.சூர்யா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

நான், சுகி சுப்ரமணியம் R.V. முகவரி: SE, பிளாக் 32, ஜெயின் ஆல்பைன் மீடோஸ், டெம்பிள் டவுன் சாலை, திருநீர்மலை, குரோம்பேட், சென்னை 600044 என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். என் மகன் C.S. Sharath Raghav இனி Sharath Raghav (ஷரத் ராகவ்) என அழைக்